சுருக்கம்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை– 2016–2017–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – அமைப்புசாரா தொழிலாளர்கள் அதிக அளவில் நல வாரியங்களில் பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் பெறும்வகையில் வாரியத் திட்டங்கள் குறித்து குறும்படம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜ1) துறை

அரசாணை (நிலை) எண்.200

நாள்:19.10.2016
துன்முகி, ஐப்பசி, 3
திருவள்ளுவர் ஆண்டு, 2047
படிக்க:

1. செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம், சென்னை–102, அவர்களின் கடிதம் எண்.E5/178/2016, நாள்:22.8.2016.
2. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண். W1/34420/2016, நாள் 24.8.2016.

------

ஆணை:-

2016–2017–ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் போது, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 16.8.2016 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

“தொழிலாளர் துறையின் கீழ் செயல்படும் 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் குறித்து அமைப்புசாரா தொழிலாளர்கள் அறிந்து கொள்ளவும், அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் அதிக அளவில் தங்களை பதிவு செய்து கொண்டு நலத்திட்ட உதவிகள் பெறுவதை ஊக்குவிக்கவும், பதினைந்து இலட்சம் ரூபாய் செலவில் ஒரு விளம்பர குறும்படம் தயாரிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்”.

2. மேலே, இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களும் அறிந்து கொள்ளவும், நல வாரியங்களில் அதிக அளவு பதிவு செய்து கொண்டு, நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடையவும், நலத்திட்ட உதவிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பர குறும்படம் தயாரிக்கவும், அதனை ஊடகங்கள் வாயிலாக

வெளியிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதற்கு, ஆகும் செலவினத் தொகையான ரூ.15 இலட்சத்தினை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் 80%–மும், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் 20% மும், பகிர்ந்து கொள்ள உரிய அனுமதி வழங்குமாறு தொழிலாளர் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே, பத்தி இரண்டில் காணும் தொழிலாளர் ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலினை செய்து, அதனை ஏற்று, அமைப்புசாரா தொழிலாளர்கள் அதிக அளவில் நல வாரியங்களில் பதிவு செய்து, நலத்திட்ட உதவிகள் பெறும்வகையில், வாரிய திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த குறும்படம் தயாரிப்பதற்கும், அதனை ஊடகங்கள் வாயிலாக வெளியிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இதற்கு ஆகும் நிதிச் செலவினமான ரூ.15,00,000/–ஐ (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள் நல வாரியம் ஆகிய வாரியங்களின் சொந்த நிதியிலிருந்து முறையே 80:20 என்ற விகிதத்தில் மேற்கொள்ள தொழிலாளர் ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இக்கருத்துருவினை உரிய தருணத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் ஆகியவற்றின் வாரியக் கூட்டத்தில் வைத்து பின்னேற்பு பெறுமாறும் தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.48417/L&E/2016, நாள் 7.9.2016–ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை– 600 034.
செயலாளர், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 102.
செயலாளர், தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை–600 102.

செயலாளர், தமிழ்நாடு ஓவியர்கள் நலவாரியம், சென்னை—600 102.
செயலாளர், தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நலவாரியம், சென்னை—600 102.
செயலாளர், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நலவாரியம், சென்னை—600 102.
செயலாளர், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நலவாரியம், சென்னை—600 102.
செயலாளர், தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை—600 102.
செயலாளர், தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை—600 102.
செயலாளர், தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை—600 102.

<u>நகல்</u>
நிதித்துறை, சென்னை—600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—600 009.
செயலாளரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை—600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலா்.